ஸ்ரீ தந்வந்த்ரயே நம:

வைத்திய சந்திரிகா

தமிழ்நாடு ஆயுர்வேத மஹாமண்டல மாதப் பத்திரிகை.

ஸாதாரண
மாசி

தொகுதி 33
பகுதி 3

Vol. 33
No. 3

ஆசிரியர் :
வைத்ய வாசஸ்பதி பண்டிட் T. S ராம சர்மா.

பிரசுரகர்த்தா :
வைத்ய T. S. ஈச்வரன், L. I. M.

வருஷச் சந்தா
ரூ. 5/-

Annual
Subscription
Rs. 5/-

முறுக்கேற்ற கெட்டிப்படும்	...	41
திருச்சி நகராட்சி ஆயுர்வேத மருந்தகம்	...	45
தோலின் வெண்மை	...	47
ஸஹஸ்ரயோகம்	...	51

காரியாலயம் : 27, சின்னக்கடைத் தெரு, தெப்பக்குளம், திருச்சி.

வைத்யரத்னம் P. S. வாரியருடைய

ஆர்ய வைத்தியசாலா

கோட்டக்கல். (கேரள ராஜ்யம்)

Registered Trade Mark.

தலைமை ஆபீஸ் போன்: கோட்டக்கல் எக்ஸ்சேஞ்ஜ்
ஆபீஸ் - அட்மினிஸ்டிரேடர் - மானேஜர் தொடர்புடன் போன் நெ 31

நர்ஸிங்ஹோம்	போன் நெ. 44
தலைமை வைத்யர்	போன் நெ. 25
மானேஜிங் டிரஸ்டி	(வீடு) போன் நெ 27
	(ஆபீஸ்) போன் நெ 61
மானேஜர்	(வீடு) போன் நெ. 26

சென்னை கிளை:

No. 1, கிருஷ்ணமாசாரி ரோடு,
நுங்கம்பாக்கம், சென்னை 34. போன் எண் 811275

மற்ற கிளைகள்:

1. கோழிக்கோடு (போன் 2155)
2. பாலக்காடு (போன் 104)
3. பாலக்காடு ஸேல்ஸ் டிபோ (போன் 584)
4. ஆல்வாய்
5. ஈரோடு (போன் 172)
6. திரூர் (போன் 31)
7. எர்ணாகுளம் (போன் 33026)
8. திருவனந்தபுரம் (போன் 3924)

மேலும் நூற்றுக்கு மேற்பட்ட அதிகாரம் பெற்ற
ஏஜண்டுகளும், டெபோக்களும்

சுத்தமானதும், உயாதரமானதுமான ஆயுர்வேத மருந்துகளும், உயர்ந்த வைத்ய ஆலோசனைகளும் எமது தலைமை ஆபீஸிலும், கிளைகளிலும் கிடைக்கும். எமது தலைமை வைத்யரால் கடிதமூலமாக வைத்ய ஆலோசனைகள் அளிக்கப்படும். நவரைக்கிழி, பிழிச்சல் முதலிய விசேஷ சிகித்ஸைகள் தலைமை வைத்யர் மேற்பார்வையில் எமது கோட்டக்கல் **கோல்டன் ஜூபிலி நர்ஸிங்ஹோமில்** நடத்தப்பெறும்.

மற்ற விபரங்களுக்கு:—

மானேஜிங் டிரஸ்டி.
ஆர்ய வைத்யசாலை, கோட்டக்கல்.

திருச்சி ஆயுர்வேதிக் யூனியன் பிரைவேட் லிமிடெட்.,

[ஸ்தாபிதம் 1939.]

ரிஜிஸ்டர்ட் ஆபீஸ் அண்டு விற்பனை டிப்போ :
31, A. சின்னக் கடைத்தெரு,
திருச்சிராப்பள்ளி–2.

Phone No. 4202

வைத்தியர்களுக்குத் தேவையான எல்லா சிறந்த ஆயுர்வேத மருந்துகளும்

வைத்தியர்களுக்கென விசேஷச் சலுகையுடன் குறைந்த விலையில் மொத்தமாகவும், சில்லரையாகவும் கிடைக்கும்.

எமது விசேஷ புத்தக வெளியீடு-1.

எமது ஸ்தாபனத்தில் கிடைக்கும் மருந்துகளின் செய்முறையை விளக்கும்

ஔஷத யோக ஸங்கிரஹம்

முதல் பாகம்

பிரதி விலை ரூ. 5–00. தபால் செலவு தனி.

விசேஷ விபரங்களுக்கு நேரில் எழுதித் தெரிந்து கொள்ளவும்

T. S. ஈச்வரன், L.I.M. மானேஜிங் டைரக்டர்.

GRAM : KALIA
Phone: Off. 3232, Res. 4343

KALIA BROTHERS (Regd.)

INDIAN DRUGS MERCHANTS
JULLUNDUR CITY. (INDIA)

Price List		Rs. ps.
Pure Musk per gram		50-00
Pure Saffron		2-50
Pure Gorochanam per gram		12-00
Pure Pearls Spl.	,,	11-00
,, No. 2	,,	7-00
,, No. 3	,,	4-00
Pure Ambar No. 1	,,	3-50
,, No. 2	,,	2-50
,, No. 3	,,	2-00
Pure Silver Leaves	,,	0-80

PACHAKARPURAM

Spl. Bhimseni per gram		0-30
Singapuri (Yellow)	,,	0-25
German or Japan	,,	0-20
Powder Pachakarpuram		0-06
Pure Menthol	,,	0-45
Pure Thymol	,,	0-20
Ashtavargam	per Kilo	7-50
Jiwak Rishwak	,,	2-50
Meda Mahameda	,,	8-00
Kakoli Kshir Kakoli	,,	8-00
Ridhi Vridhi		12-00
Silajit (Kalmodam)		
Suryatapi Silajit No. 1	,,	100-00
No. 2	,,	85-00

CRUDE DRUGS

Attis Bitter	,,	100-00
Beedana	,,	20-00
Guggulu Shudh	,,	12-00
Gowela	,,	60-00

Price List		Rs. Ps.
Kuth No. 1	per Kilo	6-50
Moosli White	,,	15-00
Pushkar mool	,,	6-50
Rose Flower Dry	,,	10-00
Som Lata	,,	10-00
Salib Panja	,,	85-00
Salib Gatha	,,	20-00
Shingraf	,,	300-00
Tiger's Fat	,,	45-00
Bears Fat	,,	40-00
Pure Vanslochan	,,	80-00

AYURVEDIC MEDICINE

Chander Prabha	per Kilo	70-00
Chavan prash	,,	10-00
Gudoochi Sattoo (Sindi Maw)	,,	12-00
Ras Sindur	,,	300-00
Shudh parad	,,	300-00
Swaran V ng	,,	200-00
Yogaraj Guggulu	,,	30-00
Kaishore ,,	,,	30-00
Maha Yogaraj ,,	,,	140-00
Abrak Bhasam	,,	200-00
KantLoh Bhasam	,,	85-00
Loh Bhasam Special	,,	150-00
Shring Bhasam	,,	35-00
Sankh Bhasam	,,	30-00
Mandur Bhasam	,,	35-00
Silajit Bhasam	,,	35-00
Silver Bhasam	,,	700-00
Swaran Makshik	,,	80-00
Sulphur Purified	,,	50-00
Tamber Bhasam	,,	300-00
Sidh Makar Dhwaj	per gram	4-20
Makar Dhwaj ordinary		0-80

Please ask for detailed Price List 6¼% Commission to the readers of Vaidya Chandrika

தந்தி: "அம்ருதம்" P. B. No. 1382. போன்: 26006

தி ஆர்ய வைத்திய பார்மஸி

(கோயமுத்தூர்) லிமிடெட்.,

தலைமை ஆபீஸ்: 366, திருச்சி ரோடு, கோயமுத்தூர்-18

THE ARYA VAIDYA PHARMACY (COIMBATORE) LTD — AVP

உண்மையான ஆயுர்வேத மருந்துகளுக்கும் சிகிச்சைகளுக்கும் சிறந்த இடம்.

எங்களுடைய கிளைகள்:

1.	23 B, பூஸா ரோடு, புது டில்லி:	போன்:	585687
2.	மொயிதீன் பள்ளி ரோடு, கள்ளிக்கோட்டை 1	,,	2984
3.	கௌடியா மடத்தெரு, மதராஸ்-14	,,	85752
4.	வளிஞ்ஞம்பலம், எர்ணுகுளம், கொச்சின்-18	,,	32988
5.	பிள்ளையார் கோயில்ரோடு, கண்ணனூர்-1	,,	92
6.	மார்க்கெட் ரோடு, பாலக்காடு-1	,,	195
7.	கடைவீதி, பொன்னானி	,,	41
8.	ரௌண்ட் வெஸ்டு, திருச்சூர்-1	,,	378
9.	கோர்ட் ரோடு, ஆலத்தூர்	,,	87
10	மெயின் ரோடு, கஞ்சிக்கோடு		
11.	ரயில்வே ஜங்ஷனுக்கு எதிரில், கோயமுத்தூர்-18	,,	33758
12	இந்திரா பில்டிங் கள்ளிக்கோட்டை-2	,,	4891
13.	229 ராஜவீதி, கோயமுத்தூர்-1	,,	33988
14.	T. T. 384 K. டெலிச்சேரி ரோடு, கண்ணனூர்-2		
15	No. 263, 64 11 வார்டு, மெயின் ரோடு, எடப்பாள் (பொன்னானி)		

பாக்டரி:
கஞ்சிக்கோடு (கேரளா)
(போன்: 2)

நர்ஸிங்ஹோம்:
திருச்சி ரோடு, கோயமுத்தூர்-18.
(போன்: 22194)

மேலும் விபரங்களுக்கு விண்ணப்பம் செய்க:—

ஆர்ய வைத்தியன் P. V. ராமவாரியர்
பிரதம வைத்தியர் & மானேஜிங் டைரக்டர்.

வாரியர்

க்ஷீரபலா - 101

ஸர்வாங்க வாதம், பாரிச வாயு முதலிய எல்லாவித மான வாத நோய்களையும் குணப்படுத்தக்கூடிய மிகச் சிறந்த மருந்து. வாயுவினால் ஏற்படக்கூடிய மூச்சுப் பிடிப்பு, மார்பு வலி, விலாப்புறங்கள் வலி, முதுகு வலி, சந்துகள் தசை நார்களில் வலி, வீக்கம், கை கால் வலி முதலிய எல்லாவிதமான நோவுகளையும் நிச்சயமாகக் குணப்படுத்தும். மற்றும் நரம்புகள் சம்பந்தப்பட்ட விரல் நடுக்கம், நாக்குக் குளறல், கண்-காது கோளாறுகள், ஒருத்தலைவலி முதலிய கோளாறுகளையும் குணப் படுத்தும்:

ரத்த அழுத்தம் [பிளட் பிரஷர்] என்ற வியாதியை குணப்படுத்தவும், வராமல் தடுக்கவும் நிகரற்றது.

ஊமையடிகளுக்கு இதைவிட சிறந்த மருந்து கிடையாது.

பிரஸவித்திருக்கும் பெண்களுக்கும் வாயுவை சீராக்கி உடம்பை தேற்றும்.

வயோதிகர்கள் இதை தினசரி உபயோகித்து வந்தால் வாத ரோகங்களும் விருதாப்பியத்தினால் ஏற் படும் நரம்புத் தளர்ச்சியும், புலன்களின் சக்திக் குறைவும் ஏற்படாமல் ஆரோக்கியத்துடன் இருக்கலாம்.

விலை 25 ML ரூ. 7-00; 12 ML. ரூ.3–75

ஆரிய வைத்தியர் கெ. எஸ். வாரியா அவர்களின்

அஷ்டாங்க ஆயுர்வேத சாலா,

சைனபஜார், தெப்பக்குளம் போஸ்ட், திருச்சி-2.

PHONE: 5441 வீடு போன்: 6074

[1936-ல் திருவப்பட்டது.]

கஸ்தூரி, குங்குமப்பூ, மற்றும் இதர
உயர்ந்த மருந்து சரக்குகளுக்கு
நம்பிக்கையான இடம்

BHALLA BROTHERS (Regd.)

LUDHIANA (India)

IN THE SERVICE OF AYURVEDA SINCE 1934

SUPPLYING PURE ARTICLES.

ஆங்கிலம் அல்லது ஹிந்தியில் எழுதவும்

மூலிகை நாட்டு மருந்துச் சரக்குகள்
சாஸ்திரீயமான ஆயுர்வேத மருந்துகள்
இவைகளுக்கு நம்பிக்கையான இடம்

K. L. TALWAR & BROS.,

MUSK MERCHANTS,

P. B. No. 17, LUDHIANA.

விலைப் பட்டியல் கேட்லாக்களுக்கு எழுதவும்.

நியூ லக்ஷ்மீ டிஸ்பென்ஸரி

(நியூ பிருந்தாவனம் சமீபம்)

கீழ ராஜ வீதி, புதுக்கோட்டை.

குழந்தைகளுக்கும் பெரியவர்களுக்கும்
சிறந்த முறையில் வைத்யம்
செய்யப்படும்.

வைத்யர்
N. வைத்யநாதன், R. M. P.

கஸ்தூரி, கோரோசனை, பச்சகர்பூரம்,
குங்குமப்பூ முதலியவைகளுக்கு
நம்பிக்கையான இடம்

BHANOT BROTHERS
(REGD.)

Wholesale Musk, Saffron and Indian Drugs Merchants,

LUDHIANA ~ PUNJAB

ஹிந்தி அல்லது ஆங்கிலத்தில் எழுதவும்

வைத்திய சந்திரிகா

தமிழ்நாடு ஆயுர்வேத மஹாமண்டலத்தின் மாதப் பத்திரிகை.

தொகுதி 33	சாதாரண மாசி	பகுதி 3
Vol. 33	1971 மார்ச்	No. 3

நம: சிவகுமாராய.

॥ श्री धन्वन्तरये नमः ॥

उदेतु हृदयाकाशे गुरुवर्यकलानिधिः ।
यदीयचन्द्रिका वैद्यसंशयध्वान्तनाशिनी ॥

முறுக்கேற்ற கெட்டிப்படும்

“ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு, ஐகமத்யம் மகாபலம். ஸங்கே சக்தி: கலௌயுகே.” என்றெல்லாம் முன்னோர்கள் கூறியுள்ளனர். பல குச்சிகள் தனியாக இருக்கும்போது சுலபமாக ஒடித்துபோம். ஒரு கட்டாகக் கட்டினால் அப்படி முடியாது. பிசிறு பிசிறாக உள்ள உரி மட்டை நார்கள் கயிறாக திரிக்கப்பட்டால் தேர்வடமாகிறது. யானைகளையும் கட்டலாம் அம்மாதிரியே உலகத்திலும் எந்த சமூகமும் ஒன்று சேர்ந்து பொறுப்புடன் செயல்பட்டால் எல்லாம் செய்ய முடியும்.

நமது தமிழ்நாடு ஆயுர்வேத மகா மண்டலம் தோன்றி பல ஆண்டுகள் ஆகின்றன; அதேபோன்று வைத்ய சந்திரிகையும் மிகப்பழமையானது. இவைகளைத் தோற்றுவித்தவர்கள் மிகப்

பெரியோர்கள். அக்காலத்தில் தமிழகத்தில் சித்தவைத்யம் ஆயுர்வேதம் முதலியன போன்ற வேற்றுமை மனப்பான்மைகள் தலை எடுக்கவில்லை. மூலை முடுக்கில் உள்ள வைத்யர்கள் பத்திரிகையையும் மண்டலத்தையும் ஆதரித்து வந்தனர். உண்மையில் விஷயம் தெரிந்துகொள்ள விருப்பமுள்ளவர்களுக்கு இரண்டு வைத்யங்களில் ஒன்று தெரிந்தால் மற்றொன்றைத் தெரிந்து கொள்வது சுலபம். தமிழ் நாட்டில் ஆயுர்வேதம் என்ற பெயர் முன் காலத்தில் இரண்டு வைத்யத்திற்கும் பொதுவாகத்தான் இருந்தது. அதனால்தான் ஆயுர்வேத மகா மண்டலத்தில் பல சித்த வைத்யர்கள் அங்கத்தினர்களாகச் சேரமுடிந்தது. இப்போதும் மண்டலத்தாரின் கருத்தில் வேற்றுமை மனப்பான்மை கிடையாது. சித்த வைத்யம் வேறு, ஆயுர்வேதம் வேறு என்று கூறும் வைத்யர்கள் வியாஸம் எழுதி அனுப்பினாலும் நமது சந்திரிகையில் ஏற்றுக்கொள்ள முடியும். எப்படியாவது தேசத்தில் ஒற்றுமை மனப்பான்மை ஏற்படவேண்டும் என்பதுதான் மண்டலத்தினுடைய நோக்கம். "வயம் பஞ்சோத்தரம் சதம்" என்று தருமர் கூறினார் பிறர் சண்டைக்கு வந்தால் துர்யோதனன் முதலான 100 பேர்களுடன் நாங்கள் ஐவரும் சேர்ந்து 105ம் ஒன்றாகிவிடும் என்பது அதன் கருத்து. ஆகவே நமக்குள் என்ன கருத்து வேறுபாடு இருந்தாலும் பிறர் ஏளனம் செய்யாதபடி வாழவேண்டும்.

சென்ற ஆண்டு மதுரையில் நடந்த ஆயுர்வேத மகாநாட்டில் ஆயுர்வேதாசார்ய V. B நடராஜ சாஸ்திரிகள் சொற்பொழிவு ஆற்றும்போது சித்த வைத்யத்திற்கும் ஆயுர்வேதத்திற்கும் அதிக வேறுபாடு கிடையாது என்று சொன்னபோது, ஒரு சித்த வைத்ய நண்பருக்கு மிகவும் கோபம் வந்துவிட்டது. அவர் கோபம் தணியட்டும் என்று இதைச் சொல்ல ஓராண்டு தாமதித்தோம். இம்மாதிரி தப்பபிப்ராயங்கள் இருந்தால் அது வருங்காலத்திற்கு மிகக் கெடுதலாகும். "காற்றுள்ளபோதே தூற்றிக் கொள்" என்பது பழமொழி. வெகுகாலம் பகீரதப்ரயத்னம் செய்து நாட்டு வைத்யக் கௌன்சில் ஏற்பட்டுள்ளது. இதைப்பற்றிய எல்லா விபரமும் பிப்ரவரி மாதத்தில் மகாசம்மேளனப் பத்திரிகையில் வெளிவந்துள்ளது புதுத்தேர்தல் ஏற்பட்டு லோக்சபை சட்டசபை முதலியவற்றில் சில மாற்றங்கள் ஏற்பட்டாலும் கூட நாம் எல்லோரும் ஒற்றுமையாக முயற்சி எடுத்துக் கொண்டால் முன்னேற்றம் அடைய முடியும் என்பது திண்ணம். நமக்குள் தற்போது விரோத மனப்பான்மை ஒன்றும் கிடையாது. ஆனாலும் முறுக்குதளர்ந்த கயிறு போல உதாசீன மனப்பான்மை இருந்து வருகிறது. நல்லபடித்தவர்களும் இளம் வயதுள்ளவர்களும்

பலர் சங்கத்தை வளர்ப்பதில் ஈடுபாடு கொள்வதில்லை. ஏதோ அன்றாடம் நிறைய சம்பாதித்தால் போதும் என எண்ணுகிறார்கள். முன்பு சங்கத்தை வளர்க்கும் காரியத்தில் ஈடுபட்ட சிலர் தற்சமயம் விரக்தி அடைந்தவர்கள் போல் ஒதுங்கி நிற்கின்றனர். பிரசார வேலைக்கும் எழுத்துவேலைக்கும் முன்வர விரும்பவில்லை. இதையெல்லாம் ஆரம்ப சூரா: கலு தாட்சிணாத்யா:" என்று ஓர் கவி கூறியது ஞாபகப்படுத்துகிறது. உடல்வலிவு உள்ளவர்கள் பிரசார வேலையில் ஈடுபடவேண்டும். வலிவு இல்லாதவர்கள் சந்திரிகையில் விஷயதானம் செய்யவேண்டும். இரண்டும் முடியாதவர்கள் தாங்கள் மண்டல மெம்பராக சேர்ந்து பத்திரிகை வாங்குவதுடன் இன்னும் பல பேர்களையும் அங்கத்தினர்களாகச் சேர்க்கவேண்டும். நமது மண்டலம் பிசிறு பிசிறாக இல்லாமல் முறுக்கேறி கெட்டியாக இருக்கவேண்டும் இதற்கு எல்லா வைத்யர்களும் ஒத்துழைக்க வேண்டும், சந்தா துகை அனுப்பி மண்டலத்தை ஆதரிக்கவேண்டும். இல்லாவிடில் நஷ்டம் நமக்குத்தான்.

FORM IV (See Rule 8)

Statement about ownership & other particulars about newspaper

VAIDYACHANDRIKA

1. Place of Publication ... Tiruchirapalli-2
2. Periodicity of its Publication ... Monthly
3. Printer's Name ... V S Mani
   Nationality ... Indian
   Address ... Githa Press, E. B Road Trichy-2.
4. Publisher's Name ... T. S. Iswaran
   Nationality ... Indian
   Address ... 27, Chinnakadai St Trichy-2.
5. Editor's Name ... P. S. Rama Sarma
   Nationality ... Indian
   Address ... Sri Sakthi Vilas Vaidya Sala, Srinivasapuram, Karur, Tiruchi Dt.
6. Names and addresses of individuals who own the newspaper and partners or shareholders holding more than one percent of the total capital. ... Tamil Nad Ayurveda Maha Mandalam, 18, Chinnakadai Street, Tiruchirapalli -2

I, T. S. ISWARAN, hereby declare that the particulars given above are true to the best of my knowledge and belief.

Dated: 7—3—1971. Signature of Publisher; (Sd). T. S. ISWARAN.

தன்வந்தரியின் மறு பிறப்பு

'உடம்புக்கு மருந்து தருவதில் நிபுணர், மனதுக்கு மருந்து தருவதில் அதைவிட நிபுணர்' என்று அனைவராலும் மதிக்கப்பட்ட ஸ்ரீஹரி தாம் அனவரதமும் வழிபட்டு வந்த பெருமாளிடம் சேர்ந்து விட்டார். ஆயுர்வேத சாஸ்திரத்தில் அவருக்கு இருந்த சிறப்பைக் கண்டு அவரை 'தன்வந்தரியின் மறுபிறப்பா'கவே கருதியவர்கள் உண்டு. புராதன இந்திய வைத்தியம் நமது கல்வித் திட்டத்தில் உரிய இடம் பெறப் பாடுபட்டவர். தொழில் முறைச் சிறப்பைவிட ஸ்ரீஹரி என்ற அன்புள்ளம் படைத்த மனிதரின் சிறப்பு மிகப் பெரிது. நோயாளிகளை அத்தியந்த உறவினர்கள் போல் ஆக்கிக் கொண்டவர் அவர் நோய் விட்ட பின்னும் வைத்தியரை விட முடியாதபடி அன்பில் பந்தப்படுத்திக்கொள்வார். உண்மையான வைஷ்ணவனாக வாழ்ந்து ஸ்ரீராமனிடம் உருகி உருகிக்கரைந்தார். நாட்டு வைத்தியம் பற்றி பல கட்டுரைகள் எழுதியவர். தர்ம காரியங்களுக்கு அள்ளி அள்ளிக் கொடுத்தவர். இனி ஸ்ரீஹரி இல்லை என்பதை ஏற்பது அவரது எண்ணற்ற அன்பர்களுக்கு இலேசில் முடியாத காரியம்தான்!

மதுரை மஹாமண்டலக்கிளை

மாதாந்திரக் கூட்டம்

சென்ற 28—2—71 ஞாயிறன்று நடைபெற்ற மாதாந்தரக் கூட்டத்தில் நாடீபரீக்ஷை பற்றிய சர்ச்சை நடைபெற்றது. வைத்யர் திரு. கிருஷ்ணமூர்த்தி, திரு. S. ஸ்ரீனிவாஸய்யர், திரு கிசோரம் அய்யர் முதலியவர்கள் பேசினார்கள் பாண்டு ரோகம் பற்றி வரும் கூட்டத்தில் ஸ்ரீ C. K. ஸ்ரீதர் அவர்கள் பேசுவார்கள்.

திருச்சி நகராட்சி ஆயுர்வேத மருந்தகம்

பொதுமக்கள் நகராட்சித் தலைவருக்கு விடுத்த கோரிக்கை

திருச்சிராப்பள்ளி கீழபுலிவார்டு ரோட்டில் வெகுநாளாக ஒரு முனிசிபல் ஆயுர்வேத வைத்தியசாலை நன்றாக நடந்து வந்தது. ஏதோ சில சொந்த காரணங்களை உத்தேசித்து ஷை ஆயுர்வேத வைத்தியசாலைக்கு திருச்சிராப்பள்ளி நகராட்சியார் ஒரு எல். ஐ. எம். டாக்டரை நியமிப்பதாக தீர்மானித்து விருது நகரில் வேலை பார்த்துவந்த ஒரு டாக்டரை நியமித்திருக்கிறார்கள். ஆயுர்வேத முறையில் பயிற்சி பெற்ற அநேக டாக்டர்கள் மனுக்கள் செய்திருந்தும், ஷை மனுக்கள் திருச்சி நகராட்சியார் கைவசம் இருந்தும் விருதுநகரிலிருந்து ஒரு எல். ஐ. எம். டாக்டரை நியமித்ததில் மர்மம் என்னவென்று தெரியவில்லை. ஷை நியமனம் செய்யப்பட்ட டாக்டரும் இந்த ஆயுர்வேத ஆஸ்பத்திரிக்கு ஏற்ற தேவையான அனுபவமும் தகுதியும் இல்லாதவராயிருக்கிறார். நியமனம் செய்த அதிகாரி தம் சொந்த நலன் கருதியே ஷை டாக்டரை நியமித்திருப்பதாகத் தெரிகிறது. இந்த டாக்டரை நியமனம் செய்தது எந்த வகையில் நியாயம் என்று தமிழ்நாடு அரசாங்க சுகாதார அதிகாரி அவர்கள் 1970-ம் ஆண்டு மத்தியில் கேட்ட கேள்விக்கு இது நாள் வரை எந்தவிதமான பதிலும் அனுப்பப்படாமல் இருக்கிறது. இது இப்படியிருக்கையில்

1. திருச்சி நகராட்சி அதிகாரி இந்த ஆயுர்வேத வைத்திய சாலையை ஒரு சித்த வைத்தியசாலையாக மாற்றுவதற்கு அரசுக்கு மனு செய்திருக்கிறார்கள். ஷை ஆஸ்பத்திரியில் ஏற்கனவே டாக்டராக இருந்தவர் இதை எதிர்த்து செய்திருக்கிற அப்பீல் இன்னும் முடிவடையாமல் இருக்கிறது.

2. திருச்சி நகராட்சி தங்களுடைய சொந்த லாபத்தை கருதியே விருதுநகரிலிருந்து, விரைவிலேயே ஓய்வுபெறும் வயதுள்ள ஒரு டாக்டரை இன்னும் சில வருடங்கள் வேலையில் வைத்துக் கொள்ள வேண்டுமென்று அரசுக்கு சிபாரிசு செய்திருக்கிறது.

3. திருச்சி நகரத்தில் சித்த வைத்திய முறை ஆஸ்பத்திரி மூன்று இடங்களில் நடைபெற்று வருகிறது. (1) திருச்சி தலைமை ஆஸ்பத்திரி (2) பீமநகர் ஆஸ்பத்திரி (3) சோமரசம்பேட்டை ஆஸ்பத்திரி போன்றவைகளாகும்.

4. திருச்சியில் குறிப்பிட்ட ஆஸ்பத்திரி தவிர பொதுமக்களின் நலனுக்கு தேவையான வேறு ஆயுர்வேத ஆஸ்பத்திரி நகராட்சியால் நடத்தப்படவில்லை.

5. ஒரு முறையிலிருந்து இன்னொரு முறைக்கு ஆஸ்பத்திரி மாற்றப்படுவதை திருச்சி நகர பொதுமக்கள் வரவேற்கவில்லை தமிழக அரசும் அப்படி மாற்றப்படுவதை விரும்பவில்லை.

6. சித்த முறையில் ஒரு ஆஸ்பத்திரி ஏற்படுத்துவது அவசியமென்றால் ஏதாவது ஒரு ஆங்கில வைத்திய முறையை எடுத்துவிட்டோ, அல்லது புதிதாக ஒரு ஆஸ்பத்திரியை ஏற்படுத்தியோ செய்யலாம். இதற்காக நல்ல முறையில் நடைபெற்று வரும் ஒரு ஆஸ்பத்திரியான ஷி ஆஸ்பத்திரியை சித்த முறைக்கு மாற்றுவது ஆயுர்வேத முறைக்கு சாவுமணி அடிப்பது போலாகும்.

7. ஷி ஆஸ்பத்திரி 1954-ம் ஆண்டு ஏற்படுத்தப்பட்டு அன்றைய தேதியிலிருந்து ஏராளமான பொதுமக்களுக்கு தொண்டு செய்து வந்திருக்கிறது.

மேலே சொன்ன காரணங்களை தீவிரமாக ஆலோசித்து இந்த ஆயுர்வேத ஆஸ்பத்திரியை சித்த முறைக்கு மாற்ற பெருவாரியான பொதுமக்கள் விரும்பவில்லை. ஆனால் நாங்கள் ஆயுர்வேத முறைக்கோ, சித்த முறைக்கோ, அல்லது யூனானி முறைக்கோ எதிரிகள் அல்ல. ஆயுர்வேத முறையில் ஒழுங்காக நடத்தப்பட்டு வந்த ஆஸ்பத்திரியை தக்க காரணங்கள் இல்லாமல் சித்தமுறைக்கு மாற்ற ஏற்பாடு செய்வது நியாயமல்ல. தற்போது இருக்கும், போதியளவு ஆயுர்வேத முறையில் தகுதி பெறாத — விரைவிலேயே பதவி ஓய்வு பெறக்கூடிய நிலையிலுள்ள ஷி டாக்டருக்கு சிபாரிசு செய்திருக்கும் நகராட்சியின் சூழ்ச்சியை முறியடித்து ஷி ஆஸ்பத்திரியை நல்ல தகுதியுடைய டாக்டரைக் கொண்டு தொடர்ந்து ஆயுர்வேத ஆஸ்பத்திரியாகவே நடத்திக் கொண்டு வரும்படி கேட்டுக்கொள்கிறோம்.

தங்களின் உத்தரவை திருச்சி — 17 லிலுள்ள திருச்சி எல். ஐ. எம். சங்கத்தின் காரியதரிசிக்கும் அனுப்பும்படி கேட்டுக் கொள்கிறோம்.

தங்களின் மேலான உத்தரவை எதிர்பார்க்கும்,
தங்கள் உண்மையுள்ள,
எஸ். சி. கோவிந்தன்,
செகரட்டரி, சிவாஜி கணேசன் தலைமை மன்றம்,
திருச்சிராப்பள்ளி.

தோலின் வெண்மை

வைத்ய ராதாகிருஷ்ண சாஸ்திரீ, திருச்சி

வாழ்நாளில் நாம எதிர்பாராதபடி சில அதிசய நிகழ்ச்சிகள் காணப்பெறுவது உண்டு வைத்யனுக்கு இத்தகைய அனுபவம் அடிக்கடி ஏற்படும். ஆனால் அதை வெளியில் சொன்னால் அவன் தற்பெருமைக்கு ஊனம் ஏற்படலாம். வைத்யரிடம் ஸைண்டிபிக் மனப்பான்மை இல்லை என்ற பிரமை நோயாளிக்கும் ஏற்படலாம். நிகழ்ச்சிகள் நியதிக்குட்பட்டே ஸைண்டிபிக்காகவேதான் ஏற்படுகின்றன. ஸைண்டிபிக் மனிதன் அந்த நியதியைப் பின்னர்தான் தன் அனுபவத்தைக் கொண்டு நிருபித்துக்கொள்கிறான்.

எனக்கு அறிமுகமான அன்பர் தோலில் வெண்ணிற மண்டலங்கள் நிறைய ஏற்பட்டு ஓடி ஒளிந்துகொண்டிருந்தவர், இரண்டாண்டுகளுக்குப் பின் காவிரியில் உடல் தேய்த்து நிம்மதியாக ஸ்நானம் செய்துகொண்டிருந்தார். ஆயிரக்கணக்கான ரூபாய்கள் செலவில் வைத்ய உதவி அவரிடம் எந்த மாறுதலையும் காட்டவில்லை என்பது எனக்கு முன்பே தெரியும். இந்த மாறுதல் எப்படி நிகழ்ந்ததென்று விசாரித்ததில் தான் 20 மாதங்களாக ஒரு பச்சிலை மருந்து ஒரு பெரியவர் உபதேசித்தபடி சாப்பிட்டதாகவும் அதனால் தோலில் 90 சதவிகிதம் நிறம் இயற்கைக்கு மாறியுள்ளதெனத் தெரிவித்தார். வைத்யனானதால் அதைத் தெரிந்து கொள்ள விரும்பியதற்கு உடன் தெரிவித்தார். பெரியவரும் லாபத்திற்காகவோ தொழிலுக்காகவோ செய்யாமல் பொது ஜன நன்மைக்காக இதைச் செய்தால் நன்கு பலிக்கும் என்று கூறி இருப்பதால் நானும் அதே எண்ணத்தில் சில மாதங்களாகப் பரிசோதனை செய்ததில் ஓரளவு லாபம் கண்கூடாகத் தெரிகிறது. இதை ஆரோக்கியம் வாசகர்களிடம் பகிர்ந்துகொள்கிறேன். இதை ஒரு தொழில் முறையாகவோ லாப நோக்குடனோ செய்யாமல் சமூக சேவை என்ற நினைப்பில் முழுதும் தர்மத்திற்கோ அல்லது மருந்து சரக்குகளின் விலையை மட்டுமோ பெற்று உதவுவது அவசியம். நோயாளிகள் தாமே தயாரித்து உட்கொள்ளலாம். இதன் மூலம் நன்மை பெற்றவர்கள் 10–15 நோயாளிகளுக்காவது இலவசமாக இதைத் தயாரித்து நன்றி உணர்ச்சியுடன் அளிக்கலாம்.

மற்றொன்றும் கவனிக்கத்தக்கது கண் மூடி கண் திறப்பதற்குள் நிகழும் அதிசயமல்ல இது. நோயின் கடுமைக்கேற்ப மாதக் கணக்கிலோ வருடக் கணக்கிலோ சாப்பிட நேரிடலாம்.

இந்த நோய் பெரும்பாலும் குருத் துரோஹம், குல தெய்வத் துரோஹம், பெரியோர்களை அவமதித்தல் இவைகளை தெரிந்தோ தெரியாமலோ செய்பவர்களுக்குத்தான் ஏற்படுகிறது. தெரிந்து செய்திருந்தால் அந்தக்குற்றத்தை பொறுத்தருள மனப்பூர்வமாக வேண்டிக்கொள்வதும் அவசியம். இறை அருள் ஒன்றே இத்தகைய பாப நோய்களிலிருந்தும் விடுதலையைப் பூர்ணமாக அளிக்கும். பிறரைக் கண்டு ஓடி ஒளியச் செய்யுமளவிற்கு மனக்கூச்சம் வர வேண்டுமானால் அதற்கான கழுவாயையும் செய்துதான் ஆக வேண்டும்.

மருந்து செய்முறை இதுதான்

ஆறு பச்சிலைகள் (1) வில்வ இலை. இதை பரமேஸ்வரனின் காலடியில் சமர்ப்பித்துக் கற்பூரம் காட்டி எடுத்துக்கொள்ள வேண்டும். பரமேஸ்வரனுக்கு அர்ப்பணமாவதற்கென்றே இது விளைந்து உள்ளதால் அவனுக்கு அர்ப்பணமாகாமல் இதை உபயோகிக்க இதன் சக்தி நம்மிடம் அருள் புரியாது. ஆகவே வியாபார முறையில் மருந்து தயாரிக்கும் நிர்வாகிகள் கூட ஒரு க்ஷணம் சிவார்ப்பணம் என நினைத்தே இதை மருந்துகளில் சேர்க்க வேண்டும். (2) கருந்துளசி இதில் இரண்டு வகை உண்டு. ஒன்று கிருஷ்ண துளசி. மிகப்பிரசித்தமானது மற்றொன்று, ராமதுளசி. இதன் பூ கனகாம்பர பூ மாதிரி இருக்கும். சில பிரசித்த தேவாலய நந்தவனங்களில் சிறிதளவு கிடைக்கும். இது மிக விசேஷம். ராமதுளசி கிடைக்கா விட்டால் கிருஷ்ண துளசியை சேர்க்கலாம். இதையும் இறைவனுக்கு அர்ப்பணம் செய்தே சேர்க்கவும். (3) பெரியா நங்கை இலை இதை நாட்டு நிலவேம்பு என்பர். யவையைப் போன்ற காய். மிகக் கசப்பான இலை. ஒரு செடி வைத்தால் ஒரு ஆண்டிற்குள் தானே வனமாகிவிடும். (4) மருதாணி இலை. (5) சங்க இலை. முள் உள்ள செடி. கொடி அல்ல. (6) வல்லாரை இலை. இவைகளைப் பச்சையாகச் சேகரித்து மூங்கில் தட்டுகளில் நிழலில் உலர்த்தவும். பூமியில் போட்டு உலர்த்தக்கூடாது. வெயிலும் நல்லதல்ல. தனித்தனியே எடுத்து உலர்த்தியதும் சம எடையாகச் சேர்த்து இடித்துத் தூளாக்கிக் கொள்ளவும்.

மருந்து தயாராகி விட்டது. தினம் 2–3 வேளை. 1 ஸ்பூன் அளவு (3 கிராம்) சாப்பிட்டு மேல் ஜலம் சாப்பிடவும். ஆண் பெண் உறவு, கடுகு, நல்லெண்ணெய் தள்ளவும் நெய், பால் அதிகம் சேர்க்கவும் இடைவிடாமல் சாப்பிடவும் தைவ சிந்தனை முந்திக்கொள்ள வேண்டும். இந்த முறையை உபயோகிப்பவர்கள் தயை செய்து எனக்கு (25 - தஞ்சாவூர் குளத்தெரு திருச்சி-2) விபரம் தெரிவித்தால் ஆராய்ச்சிக்கு உதவுக்கூடும்.

சென்ற 1970 டிசம்பரில் வெளியான ஆரோக்கியம் இதழிலும் மாசி மஞ்சரியிலும் இந்த மருந்தின் முறையை அறிந்த பல நண்பர்களின் கடிதங்கள் கிடைத்துள்ளன. அவர்கள் கேட்டுள்ள சந்தேகங்களுக்குத் தெளிவு கீழ்கண்ட பதில்களில் காணலாம்.

1. எனக்கு 3-4 வருஷங்களாக உள்ள வெண்மைக்கு நவீன முறை மருந்து சாப்பிட்டு முழுவதும் குணமானது போலிருந்து திடீரென 2-3 மாதங்களில் முன்னைப்போலப் பல மடங்கு அதிகமாக அந்நோய் பரவி உள்ளது. இம் மருந்திலும் அத்தகைய விபரீதம் விளையுமா? விளையாதென்று உறுதி கூற முடியும் தோலின் வெண்மைக்கு நேரிடையான சிகித்ஸைக்கு உதவும் கார்போகரிசிச் சத்துப் பொருளைப் போன்ற சரக்குகள் இதில் கிடையாது இது சிறந்த ரஸாயனம். இதில் கெடுதி விளைவிப்பதற்கோ மற்றொரு நோயை உண்டாக்கு வதற்கோ காரணமாகக் கூடிய பொருள்கள் ஒன்று கூட கிடையாது துவர்ப்பும் கசப்பும் அதிகமாக இருப்பதால் தொடர்ந்து சாப்பிட வேண்டியிருப்பதால் இதனால் சிலருக்கு அன்னத்வேஷம் ஏற்படக்கூடும் சாத்துக்குடிப்பழம், திராக்ஷை, பேரீச்சை, நெல்லிக்காய் இவைகளை உபயோகித்து வர அந்த சிரமமும் விலகும்

2. கருந்துளசிக்குப் பதில் ஒரு வகைக் கருந்துளசியும் கிடைக்காவிடத்தில் சாதா துளசியையும் சேர்க்கலாம். கருந் துளசி கிடைக்காதிருப்பதற்குச் சோம்பேறித்தனம் அல்லது சிரத்தைக் குறைவு காரணமாகக் கூடாது.

3. பரம்பரையில் முன்னோர்களுக்கிருந்து தற்போது ஒரு வருக்குத் திடீரென நடுவயதில் ஏற்பட்டிருந்தால் அதிலும் குணம் தருமா? மருந்து தருவது வைத்தியனின் கடமை. குணப்படுத்துவது இறையருளின் தனிச்செயல் இந்நோயில் இறையருள் தாய்சரக்கு அது எந்த அளவில் பரிபாலிக்கிறதோ அந்த அளவே குணம் கிடைக்கும். பாரம்பரிய நோயிலும் நோயின் கடுமையைக் கட்டுப்படுத்தவும் பரவலைத் தடுக்கவும் துணை நோய் களாக ஏற்படுபவைகளைத் தடுக்கவும் இது மிக அவசியம். பாரம்பரிய நோயிலும் பூர்ண குணம் ஏற்படாது என்று சொல்வதற்கில்லை.

4. இதிலுள்ள சரக்குகள் ஒன்றுகூட வெண்மை நோயில் குணம் தரவல்லதாக நூல்களில் கூறப்படவில்லையே? இது குணம் தருவது சித்தர் மகிமையாலா? சுய மகிமையாலா? சுண்ணாம்பிலும் மஞ்சளிலும் தனித்துக் காணமுடியாத செம்மையை

ஆரத்திக்காக இரண்டையும் சேர்த்துக் கரைக்கும்போது பெறுகிறோமே அது எப்படி? அது சேர்கையின் சுய மகிமையே. தனித்துள்ள நிலையில் ஏற்படாத செயல் சேர்க்கையில் ஏற்படுகிறது சித்தர் இப்படித் தனித்து நிகழ முடியாததொன்று சேர்க்கையில் நிகழ்கிறதென்பதைத் தனது பேறிவால் முன் கூட்டி அறிந்து கொள்கிறார் விஞ்ஞானி நிகழ்ச்சிக்குப்பின் காரிய காரண நியதிகளை ஆராய்ந்து அறிகிறான்

5. 15-20 மாதங்கள் தொடர்ந்து சாப்பிட நேரும் அது வரை ஆண் பெண் உடல் உறவு கொள்ளாதிருக்க முடியுமா? இதற்கு மாற்று உண்டா? உடலுறவில் ஏற்படும் சிலிர்ப்பும், உள்ளக்கிளர்ச்சியும், தொடர்ந்து ஏற்படும் தற்காலிகத் தளர்ச்சியும் காரணமாக அது தவிர்க்கவேண்டியது அவசியம் குளவி கூடுகட்டுவது போல் சிறிது சிறிதாக உடலில் நோய்வாய் பட்டுள்ள பகுதிகளைப் புதிப்பிப்பதே ரஸாயனங்களின் செயல் முறை நடுநடுவே அதற்கு இடையூறு விளைவிக்காமலிருப்பது நல்லது. மாற்று கிடையாது. உடலைப் பலவீனப்படுத்தும் எந்தச் செயலும் தவிர்க்கத்தக்கது நேர் வழியில் பலப்படுத்துபவை அனைத்தும் சேர்க்கத்தக்கவை

6. இதைத் தொடர்ந்து வேறு நோய்களில் உபயோகிக்கலாமா? குடல், கல்லீரல், மண்ணீரல், சுவாஸாசயம், ஹிருதயம், மூளையின் உணர்ச்சிக் கொந்தளிப்பை அடக்கும் பகுதி இவைகளுக்குப் புத்துயிரளிக்கக் கூடியவை இதில் சேர்ந்துள்ளன ஆகவே 40-45 வயதிற்குமேல் விருத்தாப்பியம் வேகமாக நெருங்குவதைத் தள்ளிப்போட இது ஒரு சிறந்த ரஸாயனம் முக்கியமாகக் கல்லீரல் மண்ணீரல் சீர்கேடுள்ளவர்களுக்கு இது மிகவும் நல்லது

7. இதைத் தயாரித்து விற்பனை செய்ய யாராவது முன் வருவார்களா? முன் வரக்கூடும் இதற்கு ஷட்பல்லவ சூர்ணம் (ஆறு இலைகளாலான சூர்ணம்) என்று பெயரிட்டிருக்கிறோம். பெயரின்றிக் குறிப்பிட முடியாதல்லவா? இதன் அடக்க விலை 200 கிராமிற்கு ரூபாய் நான்கு வரை ஆகிறது 200 கிராம் ஒரு மாத உபயோகத்திற்கு போதுமானது அனுப்பும் செலவு ரிஜிஸ்தர் தபாலில் இரண்டு ரூபாயாகலாம். இதை முன் பணமாக அனுப்பினால் ஒரு வார அவகாசத்தில் அவ்வப்போது தயாரித்து அனுப்ப முடியும். பணம் அனுப்ப வேண்டிய விலாசம்: திருச்சி ஆயுர்வேதிக் யூனியன், பிரைவேட் லிட், 31. A. சின்னக்கடைத்தெரு, திருச்சி-2. வி பி. யில் அனுப்ப இயலாது.

ஸஹஸ்ரயோகம்

முகரோக சிகித்ஸை (தொடர்ச்சி)

சிரங்கிற்கு திலாதி: எள்ளு, கடுகு, நெல்லு, செம்புருக் கொடி, கோரைக்கிழங்கு, திரிபலை, மிளகு, சுக்கு, மஞ்சள், கேழ் வரகு துடரி, கம்பிப்பாலை, நன்னாரி, நால்பாமரப்பட்டை, வெப் பாலைப்பட்டை, விலாமிச்சவேர், தினையரிசி, கொட்டைமுத்து, எண்ணெய், நெய், சமன் கலந்து ஒன்றாக வறுத்து அரைத்து குழம்பாகச் செய்து சிரங்குகளுக்குப் போட சீக்கிரம் குணமாகும்.

நந்தியாவட்டாதி: நந்தியாவட்டப்பூ, துடரி, கம்பிப்பாலை, நன்னாரி நால்பாமரவேர்ப்பட்டை, இவைகளை நெய்யில் வறுத்து நன்றாக அரைத்துச் சிரங்குகளுக்கு மேல் பூச குணமாகும்.

கடுக்காய் வெண்ணை: ஒரு கடுக்காயை சரியாக நடுவில் முறித்து விதையை எடுத்து ஒரு பாகத்தில் எள்ளும் மற்றொரு பாகத்தில் சந்தனத்தூளும் கலந்து இரண்டும் சேர்த்து ஐந்து சீந்திற்கொடி இலைகளால் பொதிந்து மூன்று அருகம்பில்லால் கட்டி அதை எடைபோட்டு அதற்கு எட்டுமடங்கு பசுவின்பால் சேர்த்து அதில் வேகவைத்துப் பால் பூராவும் வற்றுவதற்குமுன் எடுத்து அந்தப் பாலிலேயே அரைத்துச் சமன்வெண்ணை சேர்த்துக்கலந்து சிரங்கின் மேல் போடவும். வீக்கம் குறையும், சிறங்கு உடையும்.

சிரங்கிற்கு: அத்திப்பட்டை, சாரணைவேர், துரடிவேர், காத்தொட்டி, எள்ளு, மஞ்சள், கருவேப்பிலை, நன்னாரிவேர், வெப்பாலைப்பட்டை, திரிபலை, அருகம்பில், கோரைக்கிழங்கு, இந்துப்பு, இவைகளை மோர்விட்டு அரைத்துத்தேனில் குழைத்துப் பூச ஆறுநாட்களுக்குள் சிரங்கு பூராவும் குணமாகும்.

பகந்தரத்திற்கு: ஆலம்மொக்கு, சுக்கு, சீந்திற்கொடி, சாரணைவேர், அதிமதுரம், இவைகளை மோரில் அரைத்துப் பூசவும், பகந்தரம் தீரும்.

நிசாதி: மஞ்சள், வேப்பிலை, எருக்கு, கடுக்காய், இந்துப்பு, இவைகளை மோரில் அரைத்துப்பூச பிடகை, பகந்திரம், முதலியன தீரும்.

இளைப்பு, இருமல் முதலியதற்குப் பலதடவையாகச் சாப்பிடும் மருந்து. ஆடாதோடை இலையை வாட்டி எடுத்தரஸம், கற்பூர வள்ளி இலை வாட்டி எடுத்த ரஸம், கறுப்பு துளசி ரஸம் இவை வகைக்கு 100 மி. லி. வடிகட்டி அதில் 10 கிராம் ஜீனக்கற்கண்டும், 10 கிராம் ஜீனியும் சேர்த்துப் போட்டுக் கலக்கி ஒரு இரும்பு பாத்திரத்தில் மிளகு 200 கிராம் போட்டு வறுத்து நன்றாக வறுபட்டவுடன் அந்த மிளகைக் கீழே கொட்டி விட்டு அந்தப் பாத்திரத்தில் இந்த ரஸத்தை விட்டுச் சூடாறின பிறகு வேறு ஒரு பாத்திரத்தில் எடுத்துக்கொண்டு முன் வறுத்த மிளகைப் பொடி செய்து போட்டு 200 மி. லி, தேனும் 200 கிராம் பச்சைக் கற்பூரமும் சேர்த்து அதிலிருந்து வேளைக்கு ஒரு டீஸ்பூன் அளவு வீதம் அடிக்கடி சாப்பிடவும்.

பலவகை முற்றிற்று

ஸஹஸ்ரயோகம் முற்றிற்று

சுபம்

தங்களது 1971 வருட சந்தாவை அனுப்பிவிட்டீர்களா !

ரூபாய் ஐந்து மணியார்டர் மூலம்

பொது காரியதரிசி,

தமிழ்நாடு ஆயுர்வேத மஹாமண்டலம்

18, சின்னக்கடைத்தெரு, திருச்சி-2

என்ற விலாஸத்திற்கு அனுப்புங்கள்

இம்ப்காப்ஸ்

பூரண இயந்திர சாதன வசதியோடு சுத்தமான ஆயுர்வேத, சித்த, யுனானி மருந்துகளை தயாரிக்கிறது

இந்திய மருத்துவ முறையின்படி வைத்தியம் செய்யும் மருத்துவர்கள் 1944-ம் ஆண்டிலேயே முதன்முதலாகக் கூட்டுறவுக் கொள்கையின் அடிப்படையில் ஒரு மருந்து சாலையை நிறுவினர். சுத்தமான மருந்துகளை தயாரித்து ஆயுர்வேத, சித்த, யுனானி மருத்துவ முறைக்குச் சேவை செய்வதுடன், நம் நாட்டு மருந்து மூலிகைகளை ஆராய்ந்து, புராதன மருத்துவ வல்லுநர்கள் பின்பற்றிய முறையை ஒரு நிலைப்படுத்துவதே இதன் நோக்கம். இதில் நாங்கள் நம்பிக்கையோடு முன்னேறினோம். இப்போது நவீன இயந்திர சாதன வசதிகளுடன் மருந்துகளை பக்குவமாகத் தயாரிப்பதில் பூரணத்துவம் பெற்று மக்களுக்குத் திறமையாக சேவை புரிகிறோம்.

இம்ப்காப்ஸ் தேசமக்களை ஆரோக்கியமாகவும் வலிவுள்ளவர்களாகவும் இருக்க துணை செய்கிறது.

தி இந்தியன் மெடிகல் பிராக்டிஷனர்ஸ் கோவாப்ரேடிவ் பார்மஸி அண்ட் ஸ்டோர்ஸ் லிட்.

லாட்டிஸ் பிரிட்ஜ் ரோடு, அடையாறு, சென்னை-20

IMPCOPS

பிரபலமான கெமிஸ்டுகள் மற்றும் டிரக்கிஸ்டுகளிடம் கிடைக்கும்

மற்ற அலுவலகங்கள்:

4/186, மௌண்ட்ரோடு, மதராஸ்-2 போன்: 86520

48, தெற்குமாசி வீதி, மதுரை P.O.

27, காசிவிஸ்வேஸ்வரன் கோயில் தெரு, சுல்தான்பேட்டை, பெங்களூர்-2 (மைசூர் ஸ்டேட்)



maa/IMP./747/M-TA

VAIDYA CHANDRIKA MARCH 1971 Regd. No. M. 4081

வைத்ய வாசஸ்பதி

பண்டிட் P. S. ராமசர்மா அவர்களின்

நீண்ட கால பரீக்ஷை அனுபவத்தினால்

கண்டுபிடிக்கப்பட்ட கை கண்ட பலனளிக்கும்

“சக்தி சஞ்ஜீவி”

(REGD.)

குழந்தைகளுடைய ஈரல் குலைக்கட்டிகளை

எந்நிலையிலும், போக்குவதிலும்,

வராமல் தடுப்பதிலும் நிகரற்ற ஔஷதம

எங்கும் கிடைக்கும்.

★

தயாரிப்பவர் :

சக்தி விலாஸ வைத்தியசாலா

கரூர். (S. Ry.)

Edited by Vaidya Vachaspati Pandit P. S. Rama Sarma. Published by Dr T. S Iswaran, L.I.M., on behalf of the Tamilnad Ayurveda Mahamandalam, at 27, Chinnakadai Street, Tiruchirapalli-2. Printed at Githa Press, Tiruchirapalli-2.